CIKS

# வளம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் செய்திமடல்

காலாண்டுச் செய்திமடல்

ஏப்ரல் 2011 மலர் 7 இதழ் 1

மேலும் தகவல்களுக்கு **www.ciks.org** என்ற இணையத்தளத்தைப் பார்க்கவும்.



## பதினாறாம் ஆண்டு விழா கொண்டாட்டம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் பதினாறாம் ஆண்டு விழா ஜனவரி 23ஆம் தேதியன்று கொண்டாடப்பட்டது. மையத்தின் பல்வேறு அலுவலகங்களில் பணிபுரியும் பணியாளர்கள் அனைவரும் காஞ்சிபுரம் மாவட்டம், சுக்கன்கொல்லை கிராமத்திலுள்ள மையத்தின் இயற்கைவழி ஆராய்ச்சி பண்ணையில் நடைபெற்ற ஆண்டு விழா கொண்டாட்டத்தில் பங்கு பெற்றனர். இந்த விழாவில், இயக்குனர் ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் "பதினாறு ஆண்டுகளுக்கு முன் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் துவங்கப்பட்டதின் நோக்கம், மையத்தின் பலம் மற்றும் செயல்பாட்டைக் கட்டுப்படுத்தும் காரணிகள்" என்ற தலைப்பில் உரையாற்றினார். மேலும், ஒவ்வொரு பணியாளரும் தனது பார்வையில் சிஐகேஎஸ் குறித்து பகிர்ந்து கொண்டனர். இதை தொடர்ந்து, பல்வேறு கலை நிகழ்ச்சிகளும், போட்டிகளும் நடைபெற்றன. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு ஆண்டு விழா கொண்டாட்டம் இனிதே நிறைவடைந்தது.




இயற்கைவழி வேளாண்மையின் முக்கியத்துவம் குறித்த கலை நிகழ்ச்சியில் பங்கு பெற்ற பணியாளர்கள்

பாரம்பரிய அறிவை ஆய்வு செய்து உறுதிப்படுத்துதல் - தென் இந்தியாவிலிருந்து காம்பாஸ் திட்ட அனுபவங்கள் *(ஆங்கிலம்)*




*மேலும் விவரங்களுக்கு பார்க்க பக்கம்-4*

## புதிய திட்டம்

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் விவசாயிகள் மன்றங்களின் மூலம், தொழில்நுட்பப் பரிமாற்றம், கடன் ஆலோசனை மற்றும் விற்பனை பரிந்துரை செய்யும் திட்டம்**

வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டிற்கான தேசிய வங்கி (NABARD) "நாகப்பட்டினம் மாவட்டத்தில் விவசாயிகள் மன்றங்களின் மூலம் தொழில்நுட்பப் பரிமாற்றம், கடன் ஆலோசனை மற்றும் விற்பனை பரிந்துரை செய்தல்" என்னும் திட்டத்தை நமது மையத்திற்கு வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்திற்கான கால வரையறை ஒரு வருடமாகும். இந்தத் திட்டத்தின் கீழ், தொழில்நுட்பப் பரிமாற்றம், கடன் மற்றும் விற்பனை செயல்பாடுகளில் விவசாயிகளின் திறனை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், விவசாயிகளைத் தேர்வு செய்து விவசாயப் பயிற்சியாளர்களாகப் பயிற்றுவிக்கவும், இவர்களைக் கொண்டு இதர விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.



# செயல் திட்டங்கள் - ஒரு பார்வை

**பல்வகைமைப் பாதுகாப்பு பூச்சிக்கொல்லிகளின் அளவைக் குறைத்தல் மற்றும் தமிழ்நாட்டு விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாடு - ஒரு தற்சார்பு முக்கோணம்**

இந்தத் திட்டம் ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்டத்தின் (UNDP-GEF) உதவியுடன் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திண்டுக்கல் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் நவம்பர் 2008 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் பயனீட்டாளர்களுக்கு மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு குறித்து ஒன்பது பயிற்சிகள் நடத்தப்பட்டன. திண்டுக்கல் மாவட்ட விவசாயிகளுக்கு பூச்சிக்கொல்லிகளின் அளவைக் குறைத்தல் என்னும் தலைப்பில் 14 பயிற்சிகள் நடத்தப்பட்டன. மேலும், திட்டத்தின் பயனீட்டாளர்களுக்கு ஆறு கல்விச் சுற்றுலாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. இதில், இயற்கைவழிப் பண்ணைகள், வயல்கள், இடுபொருள் உற்பத்திக் கூடங்கள் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். சீர்காழி மற்றும் வேதாரண்யம் தாலுக்காவிலுள்ள 15 கிராமங்களில் 69.48 ஏக்கரில் 12 பாரம்பரிய நெல் ரகங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பயிரிட்டு பாதுகாப்பதற்காகப் பாரம்பரியக் காய்கறி விதைகள் நாகப்பட்டினம் மற்றும் திண்டுக்கல் மாவட்டப் பயனீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டது.

**இயற்கைவழி வேளாண்மை மூலம் தமிழ்நாட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டம்**

இந்தத் திட்டம் மும்பையிலுள்ள ஜாம்செட்ஜி டாடா டிரஸ்டின் (JTT) உதவியுடன் காஞ்சிபுரம், ராமநாதபுரம், திண்டுக்கல் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மே 2009 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நெல் ரகங்கள், நிலக்கடலை, எள், உளுந்து, சணப்பை மற்றும் காய்கறிகளில் சான்று மற்றும் உண்மை நிலை விதை உற்பத்தி 200 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இடுபொருள் உதவி மற்றும் பயிர்க்கடன் திட்டங்களின் கீழ் 763.54 ஏக்கருக்கு இடுபொருட்களும், பயிர்க்கடனும் வழங்கப்பட்டுள்ளன. இந்த உதவித் திட்டங்களின் கீழ், நெல் ரகங்கள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி, மிளகாய், வாழை, சோளம், மலர் வகைகள் போன்றவை 525.74 ஏக்கரில் சாகுபடி செய்யப் பட்டுள்ளன. நான்கு மாவட்டங்களிலும் உருவாக்கப் பட்டுள்ள மாதிரி விளக்க வயல்களில் பல்வேறு இயற்கைவழி வேளாண்மைத் தொழில்நுட்பங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இரண்டு சமுதாயக் காய்கறித் தோட்டங்கள் மற்றும் 83 மாதிரி காய்கறித் தோட்டங்களில் பல்வேறு பாரம்பரியக் காய்கறி ரகங்கள் பயிரிடப்பட்டும், பாதுகாக்கப்பட்டும் வருகின்றன. சமுதாய மண்புழு உரத் தயாரிப்புக் கூடங்களில் உற்பத்தி முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் துவங்கப்பட்ட இயற்கைவழி வேளாண்மை சார்ந்த 17 சிறுதொழில்களும் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. திட்டத்தின் பயனீட்டாளர்களுக்கு 17 குறுகிய காலப் பயிற்சிகளும், 9 பயிற்சியாளர் பயிலரங்குகளும் நடத்தப்பட்டன. மேலும், எட்டு கல்விச் சுற்றுலாக்களும் ஏற்பாடு செய்யப்பட்டன. இதில், இயற்கைவழி பண்ணைகள், வயல்கள், திருச்சி மற்றும் நாமக்கல்லில் உள்ள க்ருஷி விக்யான் கேந்திராவிற்கு (KVK) அழைத்துச் செல்லப்பட்டனர். ராமநாதபுரம் மாவட்டம் காட்டுஎமனேஸ்வரம் கிராமத்தில் தாவரக் கரைசல் தயாரிப்பகம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.



*திண்டுக்கல் மாவட்டம், களத்துப்பட்டி கிராமத்தில் உள்ள இயற்கைவழி எள் வயல்*

**தற்சார்பு வேளாண்மையை வலுப்படுத்துவதன் மூலம் கிராமப்புற வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் - மானாவாரி சாகுபடிக்கான திட்டம்**

இந்தத் திட்டம் ஃபோர்டு மற்றும் ஹீவாஸ் நிறுவனங்களின் உதவியுடன் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மலை மற்றும் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள செந்துறை பகுதியிலுள்ள 15 கிராமங்களில் 1345.81 ஏக்கரில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாதாந்திர சங்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. சென்ற பருவத்தில் 590 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த பேய் எள், கொள்ளு, மக்காசோளம், சாமை, உளுந்து மற்றும் நிலக்கடலை போன்றவை அறுவடை செய்யப்பட்டுவிட்டன. பயனீட்டாளர்கள் இயற்கைவழி வீட்டுக் காய்கறித் தோட்டங்களை உருவாக்கி பராமரித்து



*ராமநாதபுரம் மாவட்டத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் பாரம்பரிய பூசணி ரகம்*

வருகின்றனர். மண்புழு உரத் தயாரிப்பிலும் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். ஜவ்வாது மலையில் சிறு தானியங்கள் பக்குவப்படுத்தும் இயந்திரம் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திண்டுக்கல் மாவட்டத்தில் இயற்கைவழி வேளாண்மைச் சான்று திட்டத்தின் கீழ் பதிவுச் செய்யப்பட்டுள்ள விவசாயிகளின் வயல்களை தமிழ்நாடு இயற்கைவழி சான்று துறையைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் அவர்கள் ஆய்வு செய்தார்.

**ஆலங்காடு கிராமத்தில் இயற்கைவழி வேளாண்மையை அறிமுகப்படுத்தும் திட்டம்**

நமது மையம் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள ஆலங்காடு கிராமத்தில் இயற்கைவழி வேளாண்மையை அறிமுகப்படுத்தும் திட்டத்தை ஜனவரி 2009 முதல் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், 24.65 ஏக்கரில் இயற்கைவழி உளுந்து சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதை தவிர இயற்கைவழி தீவனப் பயிர் சாகுபடியிலும் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். ஜனவரி 13ஆம் தேதியன்று, பயிர்களைத் தாக்கும் பூச்சிகள், நோய்கள் மற்றும் அதன் மேலாண்மை முறைகள் என்ற தலைப்பில் பயனீட்டாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. ஜனவரி 18ஆம் தேதியன்று, காகிதப் பைகள் தயாரிப்பு முறை குறித்து ஐந்து பெண்கள் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. சமுதாயக் காய்கறித் தோட்டம் மற்றும் "பூஞ்சோலை" மர நாற்றாங்கால் ஆகியவை சம்பா பெண்கள் சுய உதவிக் குழுவினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. சமுதாய மண்புழு உரத் தயாரிப்புக் கூடத்தில் மண்புழு உர உற்பத்தி சிறப்பாக நடைபெறுகிறது. பெண்கள் சுய உதவிக் குழுவினர் பனை ஓலைகளைப் பயன்படுத்தி கைவினைப் பொருட்களைத்

# நிகழ்வுகள் - ஒரு அலசல்

தயாரித்து வருகின்றனர். மேலும், பிப்ரவரி 16ஆம் தேதியன்று, சென்னையில் நடைபெற்ற "துளிர்" கைவினைப் பொருட்கள் கண்காட்சியிலும் கலந்து கொண்டு தங்கள் தயாரிப்புகளைப் பார்வைக்கு வைத்தனர்.

### தற்சார்பு வேளாண்மையை ஊக்குவிப்பதற்கான திட்டம்

இந்தத் திட்டம் வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டிற்கான தேசிய வங்கியின் (NABARD) உதவியுடன் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள சீர்காழி தாலுக்காவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், அகணி, அல்லிவிளாகம், இளையான்குடி மற்றும் முருகமங்கலம் கிராமங்களில் 12 ஏக்கரில் நெல், உளுந்து மற்றும் பச்சை பயரில் இயற்கைவழி விதை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இயற்கைவழி இடுபொருட்கள் அங்காடி "அக்ஷயா" என்ற பெயரில் அகணி கிராமத்தில் ஜனவரி 21ஆம் தேதியன்று திறக்கப்பட்டது. அல்லிவிளாகம் மற்றும் ஆதமங்கலம் கிராமப் பெண்கள் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு கால்நடைகள் வாங்குவதற்காகக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. மார்ச் 19ஆம் தேதியன்று, சென்னையில் நடைபெற்ற "பாதுகாப்பான இயற்கைவழி உணவுத் திருவிழா"வில் கலந்து கொண்டோம். மார்ச் 3 மற்றும் 4ஆம் தேதிகளில், பெங்களூருவிலுள்ள இக்கோவா (ICCOA) நிறுவனம் நடத்திய "இயற்கைவழி பொருட்களுக்கான சந்தைத் தொடர்புகள்" என்ற தலைப்பிலான இரண்டு நாள் பயிற்சி முகாமில் நமது மையத்தின் சார்பாக மூன்று பயனீட்டாளர்களும், இரண்டு பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

### சுக்கன்கொல்லையில் நடந்த பணிகள்

சுக்கன்கொல்லையிலுள்ள நமது ஆய்வுப் பண்ணையில், கத்தரி, நிலக்கடலை, தர்பூசணி, நெல், பயறு வகைகள் மற்றும் வைத்தியக்கும்பளம் பயிரிடப்பட்டுள்ளன. மாதிரி வீட்டுக் காய்கறித் தோட்டத்தில் முள்ளங்கி, வெண்டை, வெங்காயம், அவரை போன்ற காய்கறிகள் பயிரிடப்பட்டுள்ளன. செம்மை நெல் சாகுபடி முறையில் 42 சென்டில் குள்ளகார் நெல் ரகம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மண்புழு உரத் தயாரிப்பு மற்றும் *அசோலா* வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



*மண்புழு உரத்தை அறுவடை செய்தல்*

### விதைகள் குறித்த கூட்டம்

ஜனவரி 27 மற்றும் 28ஆம் தேதிகளில், "மானாவாரி சாகுபடிக்கு ஏற்ற விதைகள்" என்ற தலைப்பிலான கூட்டத்தை மானாவாரி விவசாய மேம்பாட்டு கூட்டமைப்பு (RRA Network) அகமதாபாத்தில் ஏற்பாடு செய்திருந்தது. இந்தக் கூட்டத்தில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலுள்ள கூட்டமைப்பின் உறுப்பினர்கள், மாநில வேளாண் பல்கலைக் கழகங்கள் மற்றும் இந்திய வேளாண் ஆய்வுக் கழகத்தைச் சேர்ந்த வல்லுனர்கள் மற்றும் விதை உற்பத்தி நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் வரும் காலங்களில் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய பல்வேறு பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும், இந்தப் பணிகளை ஒருங்கிணைப்பதற்கான ஒருங்கிணைப்பு குழு ஒன்றும் உருவாக்கப்பட்டது. இந்தக் குழுவிற்கு ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். நமது மையத்தின் சார்பாக ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்களும், கே. விஜயலட்சுமி அவர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### வல்லுனர் குழு வருகை

இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையின் உதவியுடன் நமது மையத்தினால் செயல்படுத்தப்பட்டு வரும் மைய ஆதரவுத் திட்டத்தின் பணிகளை மதிப்பீடு செய்வதற்காக அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையின் வல்லுனர் குழு பிப்ரவரி 8 மற்றும் 9ஆம் தேதிகளில் நமது மையத்திற்கு வந்திருந்தனர். இந்தக் குழுவில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் டாக்டர் சுனில் அகர்வால், மா.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்தின் டாக்டர் சுதா நாயர், டெல்லி ஐஐடியைச் சேர்ந்த டாக்டர் கரே, டாக்டர் பாக்யராஜ் மற்றும் டாக்டர் பால்தேவ் சிங் ஆகியோர் அடங்குவர். பிப்ரவரி 8ஆம் தேதியன்று, சுக்கன்கொல்லையிலுள்ள ஆராய்ச்சிப் பண்ணை மற்றும் பயிற்சி மையத்திற்கு வந்திருந்தனர். அங்கு தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுப் பணிகளையும், இதர பணிகளையும் பார்வையிட்டனர். இதைத் தொடர்ந்து அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பணிகள் குறித்து மையத்தின் தொழில்நுட்பப் பணியாளர்கள் விவரித்தனர். பிப்ரவரி 9ஆம் தேதியன்று, சிஐகேஎஸ் சென்னை அலுவலகத்திற்கு வந்திருந்தனர். அங்கு தற்போதைய பணிகள் மதிப்பீடு செய்யப்பட்ட பின், வருங்காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்கான திட்ட வரைவு குறித்து விவாதிக்கப்பட்டது.

### ஆந்திராவிலிருந்து வந்திருந்த பெண்கள் குழுவினர்

ஆந்திர மாநிலத்தின் அணக்கப்பள்ளி, கிருஷ்ணா மற்றும் கோதாவரி மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் பயிற்சி மையங்களைச் சேர்ந்த 45 பெண் விவசாயிகள் நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி தாலுக்கா விலுள்ள நமது மையத்தின் திட்டப் பகுதிகளைப் பார்வையிட வந்திருந்தனர். இவர்கள் 15 பேர் அடங்கிய மூன்று குழுக்களாக, முறையே பிப்ரவரி 9-11, மார்ச் 8-9 மற்றும் 20-22ஆம் தேதிகளில் வந்திருந்தனர். இவர்கள் சமுதாயத் தாவரக் கரைசல் தயாரிப்பகம், மண்புழு உரத் தயாரிப்பகம், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பகம், இயற்கைவழி மாதிரி வயல், விதைச் சுத்திகரிப்பு நிலையம் போன்றவற்றிற்கு அழைத்துச் செல்லப் பட்டனர். இவர்களுக்கு தாவரக் கரைசல் தயாரிப்பு, மண்புழு உரத் தயாரிப்பு, பல்வேறு இயற்கைவழி தொழில்நுட்பங்கள் மற்றும் அரிசி அப்பளம் தயாரிப்பு குறித்த செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, நமது விவசாயிகள், இயற்கைவழி விவசாயச் சங்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் பெண்கள் சுய உதவிக் குழுவினர் ஆகியோருடன் கலந்துரையாடினர்.

### பாதுகாப்பான உணவு குறித்த கண்காட்சி

மார்ச் 19ஆம் தேதியன்று, சேஃப் ஃபுட் அலையன்ஸ் (Safe Food Alliance) நிறுவனத்தினால் சென்னையிலுள்ள தொல் காப்பியர் பூங்காவில் ஏற்பாடு செய்யப்பட்ட பாதுகாப்பான உணவு குறித்த கண்காட்சியில் சிஐகேஎஸ் பங்கு பெற்றது. இதில் மையத்தின் சீர்காழி அலுவலகப் பணியாளர்கள் மற்றும் சீர்காழி இயற்கை விவசாயிகள் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மையத்தின் புத்தகங்கள், வீடியோ படங்கள், மையத்தினால் பாதுகாக்கப்படும் பல்வேறு பாரம்பரிய நெல் ரகங்கள் மற்றும் இதர தயாரிப்புகள் பார்வைக்காக வைக்கப்பட்டன. நமது மையத்தின் சார்பாக சுபாஷிணி ஸ்ரீதர், ஆ.வே. பாலசுப்பிரமணியன் மற்றும் கே. விஜயலட்சுமி ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

உங்கள் கருத்துக்கள் மற்றும் விமர்சனங்களை info@ciks.org என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள்

# புத்தகங்களும் வீடியோ படங்களும்

## பாரம்பரிய அறிவை ஆய்வு செய்து உறுதிப்படுத்துதல் - தென் இந்தியாவிலிருந்து காம்பாஸ் திட்ட அனுபவங்கள் *(ஆங்கிலம்)*

இந்தப் புத்தகத்தில் உடல் நல ஆரோக்கியம் மற்றும் வேளாண்மை தொடர்பான பாரம்பரிய அறிவை ஆய்வு செய்து உறுதிப்படுத்துவதில் காம்பாஸ் திட்ட உறுப்பினர்கள் மேற்கொண்ட முயற்சிகள் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன. இதில் உடல் நலத்திற்கான உள்ளூர் பாரம்பரியச் செயல்முறைகள், கால்நடைப் பராமரிப்பு, மலேரியா மற்றும் எலும்பு முறிவுக்கான பாரம்பரியச் சிகிச்சை முறைகள் குறித்து “உடல் நல ஆரோக்கியம்” என்ற தலைப்பின் கீழும், பாரம்பரிய விதை ரகங்களின் குணாதிசயங்களை ஆவணப்படுத்துதல், நோய் எதிர்ப்புத் திறன், விதை நேர்த்தி மற்றும் பாரம்பரிய வேளாண்மைச் செயல்முறைகளை மதிப்பிடும் செய்முறைகள் குறித்து “வேளாண்மை” என்ற தலைப்பின் கீழும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஆய்வுகளின் சிறப்பான முடிவுகள் இந்தப் புத்தகத்தின் மூலம் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளன.




**விலை : ரூ. 200/-**

இந்தப் புத்தகத்தைப் பெற விரும்புவோர் புத்தகத்தின் விலையுடன் 30% தபால் செலவையும் சேர்த்து சென்னையில் மாற்றத்தக்க பணவிடை (M.O.) அல்லது வரைவோலையை (D.D.) இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் (Centre for Indian Knowledge Systems) என்ற பெயரில் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

# வருகையாளர் பதிவேடு

- *ஜனவரி 6ஆம் தேதியன்று, அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள ரென்செல்லர் தொழில் கல்வி மையத்திலிருந்து டாக்டர் என். சுகுமார் அவர்கள் வந்திருந்தார்.*
- *ஜனவரி 6ஆம் தேதியன்று, இலங்கையிலுள்ள ஐசிபிஐ (ICBI) நிறுவனத்தின் திட்ட மேலாளர் திரு. ரபேல் டியோடோனோ அவர்கள் வந்திருந்தார்.*
- *ஜனவரி 22ஆம் தேதியன்று, புளியங்குடியைச் சேர்ந்த விவசாயிகள் தலைவர் திரு. பி. கோமதிநாயகம் அவர்களும், தஞ்சாவூரை சேர்ந்த இயற்கை விவசாயி திரு. சித்தர் அவர்களும் வந்திருந்தனர்.*
- *பிப்ரவரி 2ஆம் தேதியன்று, நியூயார்க்கில் உள்ள யூனிடஸ் (UNITUS) நிறுவனத்திலிருந்து செல்வி. ஷலாகா ஜோஷி அவர்கள் வந்திருந்தார்.*
- *பிப்ரவரி 12ஆம் தேதியன்று, பெங்களூருவைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. பி. ரவிகுமார் அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார்.*
- *பிப்ரவரி 17ஆம் தேதியன்று, ஆரோவில்லில் உள்ள பிச்சாண்டிக்குளம் ஃபாரஸ்ட் கன்சல்டன்ட்ஸ் (PFC) நிறுவனத்திலிருந்து திரு. ஜாஸ் ஃப்ரூக்ஸ் அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார்.*
- *பிப்ரவரி 21ஆம் தேதியன்று, புது தில்லியிலுள்ள எகனாமிக் டைம்ஸ் (Economics Times) பத்திரிக்கை அலுவலகத்தின் கிராமப்புற இந்தியா மற்றும் சுற்றுச்சூழல் (Rural India and Environment) பிரிவின் துணை பதிப்பாசிரியர் திரு. ராஜசேகரன் அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார்.*
- *மார்ச் 24ஆம் தேதியன்று, மும்பையிலுள்ள ரிலையன்ஸ் ஃபவுண்டேசன் (Reliance Foundation) நிறுவனத்திலிருந்து திரு. அம்பிகா பிரசாத் மோஹந்தி அவர்கள் சுக்கன் கொல்லையிலுள்ள ஆய்வுப் பண்ணைக்கு வந்திருந்தார்.*
- *மார்ச் 25ஆம் தேதியன்று, திருமதி. அகிலா பாலு அவர்களும், திருவண்ணாமலை பயிற்சி மையத்தின் திரு. அருண் அவர்களும் நமது மையத்திற்கு வந்திருந்தனர்.*

ஆசிரியர் குழு : இரா. அபர்ணா தூயவதி & டாக்டர் கே. விஜயலட்சுமி

வடிவமைப்பு : ரா. ஆனந்த் & எஸ். ரமேஷ்

நூல்-அஞ்சல்

பெறுநர்

CIKS
30, காந்திமண்டபம் சாலை, கோட்டூர்புரம், சென்னை - 600 085.
தொலைபேசி : 91-044-24471087, 24475862
மின்னஞ்சல் : **info@ciks.org** இணையத்தளம் : **www.ciks.org**